2012 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்பும் கருத்து என்னவென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே இருக்கின்ற தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், கொள்முதல் நிலையங்களை அமைப்பதற்கும், தேங்காயிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கும் வசதியாகவும், இலாபகரமாகவும் இருக்கும் என்று கருதுமேயானால், அதன் மூலமாகக் கருத்துரு பெற்று அனுப்பினால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதன்மீது நடவடிக்கை எடுத்துப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

181—

மண் குன்றுகள்

***3267—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு பொதுப் பணி துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சாத்தியாறு அணையில் உள்ள மண் குன்றினை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, சாத்தியாறு அணையிலுள்ள மண் குன்றுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். இந்த நீர்த்தேக்கத்திலுள்ள குன்றுப் பகுதியை ஆழப்படுத்துவதற்கான சாத்தியக்கூறு இருப்பின், இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

[2012 ஏப்ரல் 27

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், அம்மா அவர்களுடைய அரிய தொலைநோக்குச் சிந்தனையில், வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டமான மழைநீர் சேகரிப்பு என்ற திட்டத்தினை உருவாக்கினார்கள். அதற்கு ஊக்கம் கொடுக்கும் விதமாக, சாத்தியாறு அணையிலுள்ள மணல் குன்றுகளை அகற்றி, அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளுடைய வாழ்வாதாரம் சிறப்பதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும், நிலத்தடி நீர் உயர்வதற்கும் வழிவகை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கோனார்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் தொகுப்பு மலையான சிறுமலைப் பகுதியில், செம்பட்டி காப்புக் காடுகளுக்கும், வகுப்பு மலைப் பகுதிக்கும் ஊடே சாத்தியாறு நீர்த்தேக்கம் 1965 ஆம் ஆண்டு ரூ.15.60 இலட்சம் திட்ட மதிப்பில் கட்டப்பட்டது. சாத்தியாறு அணையில் தண்ணீரைத் தேக்கி, 10 கண்மாய்களின் பாசன நிலங்கள் மற்றும் நேரடிப் பாசன நிலங்களையும் சேர்த்து சுமார் 1,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கப்படுகிறது. அணையினுடைய முழுக் கொள்ளளவு 56 மில்லியன் கன அடி ஆகும். நீர் வெளியேற்றுத் திறன் 9,705 கன அடி. பயனற்றுப்போவது 8.9 மில்லியன் கன அடி ஆகும். சாத்தியாறு அணையின் முழு நீர் மட்ட அளவு, தண்ணீர் நிரம்பி இருக்கின்றபோது, நீர் தேங்கியுள்ள பரப்பு மற்றும் குன்றுப் பகுதியிலுள்ள நிலப் பரப்பு சர்வே செய்யப்பட்டு, வரைபடம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அணையின் முழுக் கொள்ளளவில், சுமார் 74.29 ஏக்கர் பரப்பளவிலே தண்ணீர் தேங்கி உள்ளது. அருகில் உள்ள குன்றுப் பகுதியும், அதை அடுத்துள்ள நிலப் பரப்பும், முழு நீர் மட்ட அளவிற்குமேல் உள்ளதால், இப்பகுதியில் தண்ணீரைத் தேக்க இயலாது. முழு நீர் மட்ட அளவைவிட, நீர்ப் பிடிப்புப் பகுதியில் உள்ள நிலப் பரப்பு மட்டும் சுமார் 62 ஏக்கரில் அமைந்துள்ளது.

இதை ஆழப்படுத்தினால், கூடுதலாகத் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளதால், இத்திட்டத்தின் சாத்தியக்கூறுகளை விரைவாக ஆராயும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தியாறு நீர்த்தேக்கத்திலிருந்து நீர் சுமார் 10 கண்மாய்களின் வழியாகச் சென்று, அதன்மூலம் 1,500 ஏக்கர் பரப்பளவு நிலம் பாசன வசதி பெறுகின்றது. அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உயர்வதற்கும் அது ஒரு காரணமாக அமைந்துள்ளது. மழைக் காலங்களில் அதிலிருந்து வெளியில் செல்லக்கூடிய தண்ணீர் வீணாகப் போகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து, இதை நல்ல முறையில் சீர்திருத்தி, அந்த மண் குன்றுகளை அகற்றினால், விவசாயிகளுடைய வாழ்க்கை சிறக்கும் என்பதால் அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்குமாறு தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு, இந்தப் பணி ஆய்வில் உள்ளது; இந்தப் பணி நடைபெறும் என்ற பதிலை மூன்று முறை சொல்லிவிட்டேன். இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அதே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கின்றார். இந்தப் பணி ஆய்வில் உள்ளது, விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*